**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், வேலூர், வேலூர் மாவட்டம்.**

**முன்னிலை:- வெ.ரவிச்சந்திரன், பி.எஸ்.சி, பி.எல்.,**
**தலைமை ஏற்பு அதிகாரி**

**2022ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் நாள் வெள்ளிக்கிழமை**

**கணக்கீட்டு மனு எண்.1/2022**
**(சி.என்.ஆர்.எண்.TNVL02000001-2022)**

S.சியாமளா, வயது 49,
க/பெ.R.சிவலிங்கம்,
எண்.33, பெரியார் இரண்டாம் தெரு,
சாணாங்குப்பம் - 635 814,
ஆம்பூர் தாலுக்கா. . . . மனுதாரர்

எதிராக

டி.அப்துல் வாஹித் கம்பெனி,
புட்வேர் டிவிஷன்,
எண்.66/1, M.C. ரோடு, சின்னகொம்மேஸ்வரம்,
கங்காபுரம் அஞ்சல், வழி.ஆம்பூர் - 635 802. . . . எதிர்மனுதாரர்

இம்மனுவானது கடந்த 11.03.2022 அன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்ததில், மனுதாரர் தரப்பில் மனுதாரரின் அதிகார பிரதிநிதி, தொழிற்சங்க செயலாளர் திரு.R.சுந்தரமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் என் ஆய்வில் இருந்த இம்மனுவில் இன்று வழங்கும்:-

## தீர்வம்

இம்மனுவானது மனுதாரருக்கு எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் 30.09.2019

தேதிய கடிதப்படி தருவதாக கூறப்பட்ட லீவு என்கேஷ்மெண்ட் தொகையான ரூ.9,768.70ஐ 9% வட்டியுடன் வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் தாக்கல் செய்த மனு உரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனமான T.அப்துல் வாஹித் கம்பெனி, புட்வேர் டிவிசனில் தொழிலாளியாக பணியாற்றியுள்ளார். மேற்படி எதிர்மனுதாரர் நிறுவனம் தமது 30.09.2019 தேதிய கடிதம் வாயிலாக மனுதாரருக்கு லீவு என்கேஷ்மெண்ட் தொகையாக ரூ.5,397.70 மற்றும் ரூ.4,371/-ஐ போனஸ் வழங்கும் போது தருவதாக கூறியுள்ளது. ஆனால் 03.01.2022 வரை அத்தொகையினை வழங்கவில்லை. எனவே எதிர்மனுதாரர் தருவதாக கூறிய, மனுதாரருக்கு சேர வேண்டிய லீவு என்கேஷ்மெண்ட் தொகையான ரூ.5,397.70 மற்றும் ரூ.4,371/- இரண்டும் சேர்த்து ரூ.9,768.70-ஐ வசூலிக்கும் நாள் வரை 9% வட்டியுடன் மனுதாரருக்கு வழங்கிட எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு இந்நீதிமன்றத்தை மனுதாரர் அணுகியுள்ளார்.

3. இந்த மனுவில் தீர்வு காண வேண்டிய சங்கதி யாதெனில், மனுதாரர் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு எதிர்மனுதாரரால் வழங்கப்பட்ட 30.09.2019 தேதிய கடிதப்படி லீவு என்கேஷ்மெண்ட் தொகை ரூ.9,768.70-ஐ வசூலிக்கும் நாள் வரை 9% வட்டியுடன் வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டுமா என்பதேயாகும்.

4. <u>**தீர்வு**</u> :-

மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அதன்படி **: –**

இந்த மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் புட்வேர் டிவிசனில்

தொழிலாளியாக பணியாற்றிய வகையில், எதிர்மனுதாரர் நிர்வாகம் தமது 30.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு சேர வேண்டிய லீவு என்கேஷ்மெண்ட் தொகை ரூ.5,397.70 மற்றும் ரூ.4,371/-, இரண்டும் சேர்த்து ரூ.9,768.70ஐ போனஸ் வழங்கும்போது தருவதாக கூறியதாகவும், ஆனால் 03.01.2022 தேதி வரை மேற்படி அத்தொகையினை வழங்கவில்லையென்றும், எனவே எதிர்மனுதாரர் தருவதாக ஒப்புக் கொண்ட மனுதாரருக்கு சேர வேண்டிய லீவு என்கேஷ்மெண்ட் தொகை ரூ.5,397.70 மற்றும் ரூ.4,371/-, இரண்டும் சேர்த்து ரூ.9,768.70 தொகையினை வசூலிக்கும் நாள் வரை 9% வட்டியுடன் மனுதாரருக்கு வழங்கிட எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு வாதுரைக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக ஆவணம் ம.த.சா.ஆ.1 குறியிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சேர வேண்டிய லீவு என்கேஷ்மெண்ட் தொகை குறித்து எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் வழங்கப்பட்ட 30.09.2019 தேதியிட்ட கடித நகல் ம.த.சா.ஆ.1 ஆக குறியிடப்பட்டுள்ளது. மனுதாரரது கோரிக்கைக்கு மாறாக எதிர்மனுதாரர் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் வழக்கில் முன்னிலையாகி இந்த மனுவை நடத்தாத நிலையில், மனுதாரர் சாட்சியம் மூலமாக எதிர்மனுதாரர் நிறுவனத்திலிருந்து மனுதாரருக்கு சேர வேண்டிய லீவு என்கேஷ்மெண்ட் தொகை ரூ.5,397.70 மற்றும் ரூ.4,371/-, இரண்டும் சேர்த்து ரூ.9,768.70 நிலுவையிலுள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக கருதி மனுதாரர் கோரியுள்ளவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**இறுதியாக, இந்த மனுவை அனுமதித்து மனுதாரர் கோரியுள்ளவாறு எதிர்மனுதாரர் மனுதாரருக்கு சேர வேண்டிய என்கேஷ்மெண்ட் லீவு தொகை ரூ.5,397.70 மற்றும் ரூ.4,371/-, இரண்டும் சேர்த்து ரூ.9,768.70ஐ மூன்று மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், செலுத்த தவறினால் மேற்படி**

**தொகைக்கு ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை பற்றிய உத்தரவு இல்லை.**

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V RAVICHANDRAN Digitally signed by V RAVICHANDRAN

**தலைமை ஏற்பு அதிகாரி,**
**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம்,**
**வேலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>:-**

ம.த.சா.1 - திருமதி.S.சியாமளா

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>:-**

ம.த.சா.ஆ.1 - 30.09.2019 - எதிர்மனுதாரர் நிர்வாகத்தால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட கடித நகல்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:-**

- இல்லை -

V RAVICHANDRAN Digitally signed by V RAVICHANDRAN

**தலைமை ஏற்பு அதிகாரி,**
**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம்,**
**வேலூர்.**